# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை
## கலைகலாசாரபீடம்
## நான்காம் வருடம் முதலாம்
## அரையாண்டு கலைமாணித் தேர்வு - 2017/2018

### ECS 4123 Research Methodology in Economics

---

*நேரம்: 03 மணித்தியாலங்கள்*

*பகுதி I ல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II ல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.*

### பகுதி I

1.

i. சமூக விஞ்ஞான ஆய்வினை வரைவிலக்கணப்படுத்தி அதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக. — 05 புள்ளிகள்

ii. ஆய்வுகளினை மேற்கொள்வதற்கான நோக்கங்களைப் பட்டியலிட்டு அவற்றில் இரண்டினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக. — 06 புள்ளிகள்

iii. பின்வருவன பற்றி சுருக்கமாக எழுதுக.
   a) இனவியல் ஆய்வு (Ethnographic research)
   b) உள்ளடக்க ஆய்வு (Content Analysis)
   c) குழு ஆய்வு (Focus Group Discussion) — 09 புள்ளிகள்

2.

i. ஆய்வுப்பிரச்சினை, ஆய்வின்நோக்கம், ஆய்வு வினாக்கள் என்பவற்றை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. — 06 புள்ளிகள்

ii எண்ணக்கருவாக்கச்சட்டம் என்றால் என்ன? ஆய்வில் அதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாகக்குறிப்பிடுக. — 06 புள்ளிகள்

iii. ஒரு ஆய்வில் காணப்படுகின்ற ஆய்வுத்தலைப்பு, ஆய்வின்நோக்கம், எண்ணக்கருவாக்கச்சட்டம், ஆய்வு முறைமை என்பவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு எவ்வாறு காணப்படவேண்டுமென விளக்குக. — 08 புள்ளிகள்

3.

i. இலக்கிய ஆய்வு (Literature Review) என்றால் என்ன? இலக்கிய ஆய்வின்போது கவனிக்கப்படவேண்டிய விடயங்களைப் பட்டியல்படுத்துக. — 06 புள்ளிகள்

ii. ஒரு ஆய்வாளன் இலக்கிய ஆய்வினைச்செய்கின்றபோது ஏற்படுகின்ற சாதகமான விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. — 07 புள்ளிகள்

iii. ஆய்வில் இலக்கிய மேற்கோள்களைச் செய்கின்றபோது (Citation) பின்பற்றவேண்டிய முறைகளை உதாரணத்துடன் விளக்குக. — 07 புள்ளிகள்

### பகுதி II

4.

i. சமூக விஞ்ஞான ஆய்வாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற தரவுகளின் (Data) வகைகளை சுருக்கமாக விளக்குக. — 06 புள்ளிகள்

ii. ஆய்வுகளில் மாதிரியெடுப்பு (Sampling) ஏன் அவசியமானது எனக்குறிப்பிட்டு, எவையேனும் இரண்டு மாதிரியெடுப்பு முறைகளை உதாரணத்துடன் விபரிக்குக. — 07 புள்ளிகள்

iii. பரிமாணம் (Dimension), காரணிகள் (Variables), குறிகாட்டிகள் (Indicators) என்பவற்றை உதாரணங்களுடன் வரையறுக்குக. — 07 புள்ளிகள்

5.

i. Likert ஆய்வு முறை என்றால் என்ன? எவ்வகையான ஆய்வுகளுக்கு இவ்வாய்வு முறை வேண்டப்படுகிறது என்பதை விளக்குக. 06 புள்

ii 'Cronbanch னுடைய பரிசோதனை' என்றால் என்ன? ஏன் இப்பரிசோதனையானது Likert ஆய்வில் முக்கியம் பெறுகின்றது. 07 புள்

iii ஆய்வுகளில் பண்பியல் (Qualitative) சார் தரவு கையாள்கைக்கும் அளவியல் சார் (Quantitative ) சார் தரவு கையாள்கைக்குமிடையிலுள்ள சாதக மற்றும் பாதக அம்சங்களை ஆராய்க. 07 புள்

6.

i. பிற்செலவுப்பகுப்பாய்வு முறை (Regression Method) என்றால் என்ன? ஒரு ஆய்வில் இம்முறையினைப் பயன்படுத்தவேண்டிய சந்தர்ப்பத்தினை விளக்குக. 07 புள்

ii. போலி மாறிகள் (Dummy Variables) என்றால் என்ன? தரவுப்பகுப்பாய்வில் இம்மாறிகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என உதாணங்களுடன் விளக்குக. 06 புள்

ii. காலத்தொடர் தரவுகள் (Time Series Data) என்றால் என்ன? காலத்தொடர் தரவுகளை பகுப்பாய்வு செய்கின்றபோது கையாளப்படும் தரவுப்பகுப்பாய்வு படிமுறைகளை அனுமான முறை உதாரணம் தந்து விளக்குக. 07 புள்

7. Covid-19 காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில்களில் ஏற்பட்ட தாக்கத்தினை ஆய்வு செய்வதற்கு நீர் பரிந்துரைக்கப்படுகின்றீர் எனக்கொள்க.

i. பொருத்தமான ஆய்வுத்தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, ஆய்வின் நோக்கம் என்பவற்றை குறிப்பிடுக. 05 புள்

ii. பொருத்தமான எண்ணக்கருவாக்கச்சட்டத்தினை தந்து பயன்படுத்த வேண்டிய காரணிகள் மற்றும் குறிகாட்டிகளைக்குறிப்பிடுக. 07 புள்

iii. இவ் ஆய்விற்கு பயன்படுத்தவேண்டிய மாதிரியெடுப்பு மற்றும் பொருத்தமான ஆய்வு முறைகள் தொடர்பாக விளக்குக. 08 புள்